**Starting time 12.40 A.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 109/2011**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 16.08.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : வெற்றி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**3. வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :** தாவா ஏ அட்டவணை சொத்தானது எனக்கு பரிவர்த்தனை கொடுத்த ராஜேந்திரனுக்கு பாகம் மூலமாக வந்தது என்றால், ஆமாம். 21.04.2004 தேதியன்று ராஜேந்திரனும் அவரது குடும்பத்தினரும் பாகப்பிரிவினைச் செய்து கொண்டார்கள் என்றால், ஆமாம். அந்த பாகப்பிரிவினைப் பத்திரத்தில் D அட்டவணைச் சொத்து 1-ம் பிரதிவாதிக்கு வந்தது என்றால், ஆமாம். 1-ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட D அட்டவணை சொத்தை 3-ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார் என்றால், ஆமாம். 3-ம் பிரதிவாதியிடம் இருந்துதான் 4, 5 பிரதிவாதிகள் அந்த சொத்தைக் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால், ஆமாம். 21.04.2004 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் எவ்வாறு பிரிக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால், ஆமாம். நான் பாகப் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால், ஆமாம். மேற்படி பாகப்பிரிவினைப் பத்திரத்தின் மூலம் புல எண் 88/1G-ல் உள்ள கிணறும் அதில் உள்ள 5 H.P. மின் மோட்டார் மின் இணைப்பு எண் 15 பாத்தியப்பட்டது என்றால், ஆமாம். புல எண் 88/1D-ல் உள்ள கிணற்றில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால், சரியல்ல, எனக்கு இருக்கிறது. அந்த கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் 451-லும் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால், சரியல்ல, இருக்கிறது.

4. புல எண் 88/1D-ல் உள்ள கிணற்றில் எனக்கும், எனக்கு பரிவர்த்தனை செய்த ராஜேந்திரனுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. ராஜேந்திரம் 1-ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரன் என்பதால் புல எண் 88/1G-ல் உள்ள கிணற்றில் தண்ணீர் இல்லாததால் புல எண் 88/1D-ல் உள்ள கிணற்றில் ராஜேந்திரன் தண்ணீர் எடுத்துக்கொள்வதாக 1-ம் பிரதிவாதியிடம் அனுமதி கேட்டு ஊர் பெரியவர்கள் முன்னிலையில்பேசி அதன் அடிப்படையில் 1-ம் பிரதிவாதி அனுமதி வழங்கினார் என்றால், சரியல்ல. அந்த சொத்தை வேறு மூன்றாம்நபர்களுக்கு ராஜேந்திரன் விற்றால் அவர்களுக்கு புல எண் 88/1D-ல் உள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்க உரிமை இல்லை என்று ஒப்புக்கொள்ளப்பட்டும் ராஜேந்திரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க புலஎண் 88/1D-ல் உள்ள கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று பாகப்பிரிவினைப் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால், ஆமாம். 20.02.2007 தேதியன்று ராஜேந்திரன் வேறு நபர்களுக்கு சொத்தை விற்றால் புல எண் 88/1D-ல் தண்ணீர் எடுக்கும் உரிமை அவர்களுக்கு கிடையது என்று ரத்து பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால், சரியல்ல, அவ்வாறு எதுவும் ஏற்படுத்தபடவில்லை. ரத்து பத்திரம் எழுதி விவரம் எனக்கு தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.51 P.M.

**(ஒப்பம்/- என்.திலகேஸ்வரி)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**ஆத்தூர்.**